**நியு சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு**

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.



# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2025

## ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3 & 4)

## Basic Level (Year 3 & 4)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்

Time Given : 60 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
ஆசிரியர், மாணவர்களுக்கு முதல் 10நிமிடங்களுக்கு
வினாக்களையும் விடைகளையும் வாசித்துக் காட்டவேண்டும்

**Aug 2025**

**For questions 1 - 5 choose the word that best describes what's shown in the picture.**

**1 – 5 வரையிலான வினாக்களுக்குப் படத்தைப் பார்த்துப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க..**


1. பூங்காவில்____________தோகை விரித்து ஆடுகிறது.

(அ) குயில்

(ஆ) மயில்

(இ) காகம்

(ஈ) புறா



2. பூனை____________ குடிக்கின்றது.

(அ) பால்

(ஆ) இறைச்சி

(இ) தண்ணீர்

(ஈ) மீன்



3. கண்ணன்____________பந்து விளையாடுகிறான்.

(அ) வீதியில்

(ஆ) கடையில்

(இ) மைதானத்தில்

(ஈ) கடலில்



4. வாணி____________ஆடுகிறாள்.

(அ) பாட்டு

(ஆ) நடனம்

(இ) சமையல்

(ஈ) பேச்சு



5. வாணியும் கண்ணனும்____________சென்றார்கள்.

(அ) நீர்வாழ் உயிரினக் காட்சிச்சாலைக்குச்

(ஆ) விண்வெளிக்குச்

(இ) கோயிலுக்குச்

(ஈ) பாராளுமன்றத்துக்குச்



**For Questions 6 -10, choose the correct word to complete the questions.**

6 – 10 வரையிலான கேள்விகளுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

6. சூரியன்____________உதிக்கும்.

(அ) மாலையில் (ஆ) காலையில்

(இ) இரவில் (ஈ) மத்தியானத்தில்

7. சிறுவர்கள்____________மணல் வீடு கட்டி விளையாடினார்கள்.

(அ) பூங்காவில் (ஆ) கடற்கரையில்

(இ) தோட்டத்தில் (ஈ) மைதானத்தில்

8. வாணி வாசலில் அழகான____________ போட்டாள்.

(அ) படம் (ஆ) கோலம்

(இ) வட்டம் (ஈ) பாதை

9. சூரியனின்____________கீழ்வானிலே தாவின.

(அ) விம்பம் (ஆ) வெப்பம்

(இ) ஒளிக்கதிர்கள் (ஈ) கோலம்

10. பறவைகள்____________தேடி அலைந்தன.

(அ) இரை (ஆ) வானம்

(இ) நிலா (ஈ) காற்று

**For questions 11 - 12, select the sentences that is written in the correct order.**

11 – 12 வரையான வினாக்களுக்கு சரியான வசனத்தைத் தெரிவு செய்க.

11. (அ) இது தமிழரின் பாரம்பரிய வரவேற்பு முறை ஆகும்.

(ஆ) தமிழரின் இது பாரம்பரிய ஆகும் வரவேற்பு முறை.

(இ) வரவேற்பு முறை ஆகும் இது தமிழரின் பாரம்பரிய.

(ஈ) பாரம்பரிய வரவேற்பு முறை இது ஆகும் தமிழரின்.

12. (அ) களைப்பாக இருந்தது அவர்களுக்கு வெயிலில் நடந்ததால்.

(ஆ) வெயிலில் நடந்ததால் அவர்களுக்கு களைப்பாக இருந்தது.

(இ) அவர்களுக்கு இருந்தது வெயிலில் நடந்ததால் களைப்பாக.

(ஈ) வெயிலில் நடந்ததால் களைப்பாக இருந்தது அவர்களுக்கு.

**For questions 13 - 15 choose the correct word to complete a meaningful sentence.**

13 – 15 வரையுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்வதன் மூலம் பெரியோர் கூற்றை நிறைவுசெய்க.

(அ) அகத்தின் (ஆ) இறைவன் (இ) கல் (ஈ) அரசன்

13. இளமையில்__________.

14. __________ அழகு முகத்தில் தெரியும்.

15. எழுத்தறிவித்தவன் __________ஆவான்.

**For questions 16 - 18, choose the appropriate verb to rewrite the sentences given in the present tense in the future tense.**

16 – 18 வரையான வினாக்களில் நிகழ்காலத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் வசனங்களை **எதிர்காலத்தில்** மாற்றி எழுதப் பொருத்தமான வினைச் சொல்லைத் தெரிவு செய்க.

16. முயல் தோட்டத்தில் துள்ளி ஓடுகின்றது.

(அ) ஓடின (ஆ) ஓடும்

(இ) ஓடியது (ஈ) ஓடுகின்றன

17. அம்மா மீன் கறி சமைக்கின்றார்.

(அ) சமைத்தனர் ((ஆ) சமைத்தார்

இ) சமைப்பார் (ஈ) சமைக்கின்றனர்

18. மாலாவும் மீராவும் கடைக்குச் செல்கின்றார்கள்.

(அ) சென்றனர் (ஆ) செல்வார்கள்

(இ) சென்றாள் (ஈ) செல்வாள்

**For Questions 19 - 20, choose the correct word to complete the sentences.**

19 – 20 வரையான வினாக்களில் கோடிட்ட இடத்தில் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க

19. சீதா ஓவியக் __________ யைக் காணச் சென்றாள்.

(அ) கன்காட்சி (ஆ) கண்காச்சி

(இ) கண்காட்சி (ஈ) கண் காட்டி

20. சோம்பேறியான முகிலனை முதலாளி __________ யில் இருந்து நீக்கினார்.

(அ) வேலை (ஆ) வேளை

(இ) வேழை (ஈ) வேள்ளை

**Read and understand the given poem and choose the correct answer to questions 21 - 25.**

கீழே தரப்பட்ட பாடலை வாசித்து 21 – 25 வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.



தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு – அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக்குட்டி
அம்மா என்குது வெள்ளைப் பசு – உடன்
அண்டையில் ஓடுது கன்றுக்குட்டி
நாவால் நக்குது வெள்ளைப் பசு – பாலை
நன்றாய்க் குடிக்குது கன்றுக்குட்டி
முத்தம் கொடுக்குது வெள்ளைப் பசு – மடி
முட்டிக் குடுக்குது கன்றுக்குட்டி

21. தோட்டத்தில் கன்றுக் குட்டி என்ன செய்கிறது?
    (அ) படுத்திருக்கின்றது (ஆ) கத்துகின்றது
    (இ) துள்ளிக் குதிக்கின்றது (ஈ) தண்ணீர் குடிக்கின்றது


22. இப் பாடலில் கூறப்படும் பசுவின் நிறம் என்ன?
    (அ) கறுப்பு (ஆ) வெள்ளை
    (இ) சாம்பல் நிறம் (ஈ) கறுப்பும் வெள்ளையும் கலந்த நிறம்

23. பசுவின் இளமைப் பருவத்தை எவ்வாறு கூறுவார்கள்?
    (அ) பிள்ளை (ஆ) குழந்தை
    (இ) குஞ்சு (ஈ) கன்று


24. அண்டையில் என்ற சொல்லுக்குப் பொருத்தமான வேறு சொல் என்ன?
    (அ) தூரத்தில் (ஆ) அருகில்
    (இ) தொலைவில் (ஈ) உயரத்தில்


25. இப்பாடலில் தோட்டம் என்பதன் மூலம், நீங்கள் விளங்கிக் கொள்வது என்ன?
    (அ) புற்கள் நிறைந்த பகுதி (ஆ) நீர் நிறைந்த பகுதி
    (இ) கற்கள் நிறைந்த பகுதி (ஈ) மணல் நிறைந்த பகுதி

**Look at the below picture and answer the questions from 26 - 30.**
கீழே உள்ள படத்தைப் பார்த்து 26 – 30 வரையுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்.










26. மேலே உள்ள படங்கள் எதனைக் காட்டுகின்றன?
    (அ) பருவகாலங்களைக்    (ஆ) குளிர்காலத்தினை
    (இ) மாரிகாலத்தினை    (ஈ) கோடைகாலத்தினை

27. இரண்டாவதாக காட்டப்பட்டுள்ள படத்திற்குரிய காலம் என்ன?
    (அ) குளிர்காலம்    (ஆ) வசந்தகாலம்
    (இ) இலையுதிர்காலம்    (ஈ) கோடைகாலம்

28. இலையுதிர்காலம் எத்தனையாவது படத்தில் உள்ளது?
    (அ) முதலாவது    (ஆ) இரண்டாவது
    (இ) மூன்றாவது    (ஈ) நான்காவது

29. கீழ்வரும் கூற்றுகளில் கோடை காலத்தில் நிகழும் நிகழ்வு எது?
    (அ) வெயில் மிகவும் சூடாக இருக்கும்.
    (ஆ) காற்று மிகவும் குளிர்ச்சியாக இருக்கும்.
    (இ) இலைகள் செம்மஞ்சள் நிறமாக மாறி கீழே விழும்.
    (ஈ) மக்கள் பனிச்சறுக்கல் இடங்களுக்குச் செல்வார்கள்.

30. கீழ்வரும் கூற்றுகளில் சரியானதைத் தெரிவு செய்க.
    (அ) வசந்தகாலத்தில் மரங்களில் இருந்து இலைகள் உதிரும்.
    (ஆ) இலையுதிர்காலத்தில் பூக்கள் பூக்கும். எங்கும் பசுமையாக இருக்கும்.
    (இ) குளிர் காலத்தில் இலைகளில் பனி படர்ந்திருக்கும்.
    (ஈ) கோடை காலத்தில் பனி அதிகமாக இருக்கும்.

**For questions 31 - 33 choose the word that is same meaning to the word underlined.**

31–33 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான ஒத்த சொல்லைத் தெரிவு செய்க.

31. அறம் செய விரும்பு.

(அ) நன்மை (ஆ) தீமை (இ) தர்மம் (ஈ) உண்மை

32. அச்சமில்லை அச்சமில்லை அச்சம் என்பதில்லையே என பாரதியார் பாடினார்.

(அ) கோபம் (ஆ) பயம் (இ) கவலை (ஈ) மகிழ்ச்சி

33. அந்தக் கேள்விக்கு எப்படி விடை எழுதலாம் என்று யோசித்தேன்.

(அ) படித்தேன் (ஆ) சிந்தித்தேன் (இ) சிரித்தேன் (ஈ) வாசித்தேன்

**For questions 34 - 35 choose the word that is opposite in meaning to the word underlined.**

34–35 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லுக்குப் பொருத்தமான எதிர்ச் சொல்லைத் தெரிவு செய்க.

34. ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற கலா மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

(அ) இன்பத்துடன் (ஆ) சந்தோசத்துடன் (இ) கோபத்துடன் (ஈ) துக்கத்துடன்

35. உண்மை பேசினால் உயர்வு கிடைக்கும்.

(அ) நேர்மை (ஆ) தாழ்வு (இ) பொய் (ஈ) தீமை

**Choose the correct answer for questions 36 - 39.**

36–39 வரையுள்ள வினாக்களில் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

(அ) தை (ஆ) எத்தனை (இ) பெரியப்பா (ஈ) யார்

36. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி... என்ற பாடலை__________ பாடினார்?

37. அப்பாவின் அண்ணாவை __________ என்று அழைப்போம்.

38. வானவில்லில்__________ நிறங்கள் உள்ளன?

39. தைப்பொங்கல் __________ மாதத்தில் கொண்டாடப்படுகிறது.

**Arrange the following sentence in the correct order.**

40. கீழ்வரும் வசனங்களை சரியான வரிசையில் ஒழுங்குபடுத்தவும்.

1. பின்னர் பல தடிகளை ஒன்றாகச் சேர்ந்துக்கட்டி அதனை முறிக்கும் படி சொன்னார். அவர்களால் இலகுவாக முறிக்க முடியவில்லை.
2. இது தான் 'ஒற்றுமையின் பலம்' என்றார்.
3. அதனால் அவர்களது அப்பா கவலைப்பட்டார்.
4. ஒரு குடும்பத்தில் எட்டுப் பிள்ளைகள் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி சண்டை போட்டுக் கொண்டு இருந்தார்கள்
5. ஒருநாள் அவர்களிடம் ஒரு தடியைக் கொடுத்து அதனை அவர்கள் தனித்தனியாக முறிக்கும் படி சொன்னார். அவர்கள் இலகுவாக முறித்து விட்டார்கள்

(அ) 4, 3, 5, 1, 2 (ஆ) 3, 5, 4, 2, 1 (இ) 2, 3, 5, 1, 4 (ஈ) 5, 3, 1, 4, 2